அதைக் கண்காணித்து விவசாயிகள் பாதிக்கப்படாத அளவுக்கு, உரிய நடவடிக்கை அரசின் சார்பில் மேற்கொள்ளப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தைக் கருத்தில் கொண்டு கேரள அரசோடு தொடர்பு கொள்வதற்கான முயற்சியை அரசு எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்காலிக ஏற்பாடாக 5 வகையான இயந்திரங்கள் வைக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவற்றின் மூலம் நிச்சயமாக அந்தத் தூசியைத் தடுக்க முடியாது. இதே பிரச்சினை தமிழ்நாடு சிமெண்ட் ஃபேக்டரியிலும் இருக்கிறது. அரசு நடத்துகிறது அதை. மத்திய அரசை அணுகி சிமெண்ட் ஆலைகளைப் பொறுத்தவரையில் வெட் ப்ராசஸ் என்பதை அடியோடு காலி செய்துவிட்டு டிரை பிராசஸ்-க்கு மாற்றவேண்டும் என்ற முயற்சியை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

9–25 மணி

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அமைச்சரவையிலே இருந்துகூட ஒவ்வொரு மாநிலத்திற்கும் கடிதம் எழுதப்பட்டிருக்கின்றது. நம்முடைய மாநிலத்திற்குக்கூட இது குறித்து எடுத்த நடவடிக்கைகள் குறித்து கடிதம் வந்து அதற்கான பதிலை எழுதியிருக்கிறோம். ஆகவே அவர்களும் தொடர்பு கொண்டிருக்கின்ற காரணத்தினாலே இது குறித்து விரைவில் சுமுகமான முடிவு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பயிற்சி மருத்துவர்களுக்கு உதவிப்பணம்.

* 2083—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பயிற்சி மருத்துவர்களின் உதவிப் பணத்தை உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயிற்சி மருத்துவர்களுடைய உதவித்தொகை ஆந்திராவில் ஆயிரம் ரூபாயாகவும், கேரளாவில் ஆயிரத்து இருநூறு ரூபாயாகவும் பல ஆண்டுகளாக வழங்கப்படுகிறது. வேலைப்பளு பயிற்சி மருத்துவர்களுக்கு அதிகமாக இருக்கிறது. காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை வேலை செய்ய வேண்டியதாக இருக்கிறது. டியூட்டி காலங்களில் காலை 7 மணி முதல் மறுநாள் காலை 7 மணி வரை அவர்கள் வேலை செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் வினாவாகக் கேட்க வேண்டும்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவுஸ் சர்ஜன் பணி பயிற்சி காலங்களில் அவர்களுக்குத் திருமணம் போன்ற நல்ல காரியங்கள் நடக்கின்றன. இதையெல்லாம் கருத்தில் கொண்டு, அவுஸ் சர்ஜன் உதவித் தொகையை மேலும் அதிகரிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த நல்ல காரியம் திருமணத்தோடு நிற்கிறதா, இன்னும் மேலே போகிறதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வ சிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட காலமாக பயிற்சி மருத்துவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த தொகையை கலைஞர் அவர்கள் அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகுதான் உயர்த்தியது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். முதலில் 550 ரூபாயாக இருந்தது, ரூ. 750 ஆகவும், மேற்படிப்பு மருத்துவ மாணவர்களுக்கு ரூ. 600-லிருந்ததை ரூ. 800 ஆகவும், ரூ. 750 என்று இருந்ததை ரூ. 950 ஆகவும் ரூ. 850 என்று இருந்ததை ரூ 1,050 ஆகவும் இந்த அரசு 17-8-1989-ல் ஆணைகள் பிறப்பித்து உயர்த்தியிருக்கிறது. மீண்டும் அந்த மாணவர்கள் 9-9-1989-ல் இந்தத் தொகை மற்ற மாநிலங்களை ஒப்பிடுகின்றபோது குறைவாக இருக்கிறது. ஆகவே அதை உயர்த்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அந்த அடிப்படையிலே இந்தத் தொகை வருகின்ற இந்த நிதிநிலை அறிக்கையிலே உயர்த்தப்படும் என்று சொல்லி அவர்களுடன் பேசித்தான் அவர்களுடைய போராட்டம் விலக்கிக்கொள்ளப்பட்டது. மருத்துவத் துறையினுடைய மானியக் கோரிக்கை வரும்போது, உயர்த்தப்பட்ட தொகைகள் பற்றிய குறிப்புகளை இந்த அரசு அறிவிக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

1990 மார்ச் 31]

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீனியர் அவுஸ் சர்ஜன், போஸ்ட் கிராஜுவேட் போன்ற மருத்துவர்கள் பயிற்சி மருத்துவர்கள் தங்கும் விடுதியில் தங்கி இருப்பதால் பயிற்சி மருத்துவர்கள் தங்குவதற்கு அறைகள் இல்லாமல் மெடிகல் காலேஜிலே தங்கியுள்ளார்கள். இது குறித்து அரசுக்குத் தகவல் வந்துள்ளதா ? பயிற்சி மருத்துவர்கள் இல்லங்கள் மேற்கொண்டு விஸ்தரிக்கப்படும் குறிப்பு அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன் :

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்இற தெய்வசிகாமணி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வி உதவித்தொகையைப் பற்றியது. விடுதிகள் பற்றி தெரிய வேண்டுமானால் தனிக் கேள்வி கேட்கவும்.

கழிவு நீர் சுத்திகரிப்புத் திட்டம்.

*7946—திரு. ஜெ. அசேன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராணிப்பேட்டையில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கான பொதுவான கழிவுநீர் (Common effluent Treatment plant) சுத்திகரிப்புத் திட்டம் எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்இற தெய்வசிகாமணி : இராணிப்பேட்டை தோல் பதனிடுவோர் சங்கமும், தமிழ்நாடு தோல் வளர்ச்சிக் கழகமும் இணைந்து ஏற்படுத்தியுள்ள ''இராணிடெக்'' (Ranitec) என்ற நிறுவனம் மூலம் அமைக்கவிருக்கும் பொதுவான கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையத்திற்குத் தேவையான நிலம் வாங்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் நிதி உதவி கிடைத்தவுடன் நிர்மாணப் பணிகள் தொடங்கப்படும்.

பீடித் தொழிலாளர் நல வாரியம்.

*5039—திரு. சு. குருநாதன் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாட்டில் பீடித் தொழிலாளர்களின் குறைகளைப் போக்க பீடித் தொழிலாளர் நல வாரியம் அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பீடித் தொழிலாளர்களின் நலனிற்காக 1976ஆம் ஆண்டு பீடித்தொழிலாளர் நல நிதிச் சட்டம் என்று ஒரு சட்டம் மத்திய அரசால் இயற்றப்பட்டுள்ளது. பீடித் தொழிலாளர் நல நிதியிலிருந்து மருத்துவ வசதி, கல்வி வசதி, வீட்டு வசதி முதலிய